**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

# பல்கலைக்கழக விசேட அனுமதி

# பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2024 / 2025

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E.உயர் தர(A/L) பரீட்சைக்கு தோற்றிய பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து, 2024/2025 கல்வியாண்டிற்கான விசேட அனுமதி நிபந்தனையின் கீழ், கீழே பட்டியலிடப்பட்டுள்ள பட்டப்படிப்புகளைப் பின்பற்ற விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

இந்த நிபந்தனையின் கீழ் அனுமதிபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள், 2024/2025 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிகள் கையேட்டின் பிரிவு 1.2 மற்றும் 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிகளை கொண்டிருக்க வேண்டும். (கையேடுUGC இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.)

இந்த விசேட அனுமதியின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான தகுதி நிபந்தனைகள்:

- பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E.உயர் தர (A/L) பரீட்சையை பிரெயில் (Braille) முறையில் எழுதியிருக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் செல்லுபடியாகும் மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
- 2024/2025 கல்வியாண்டிற்கான சாதாரண மாணவர் அனுமதியின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காத பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களும் இந்த சிறப்பு ஏற்பாட்டின் கீழ் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.
- இந்த விசேட அனுமதி நிபந்தனையின் கீழ் முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.
- பாடநெறிகளை விருப்பொழுங்கு வரிசையில் விண்ணப்பபடிவத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
- செயன்முறை/திறனறிவு பரீட்சைகள் தேவையான பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் நடாத்திய செயன்முறை/திறனறிவு பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் செயன்முறை/திறனறிவு பரீட்சையை நடாத்தும்.

| யுனி-கோட் | கற்கைநெறி | பல்கலைக்கழகம் | மாணவர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | பார்வை யற்றவர்கள் | மாற்றுத் திறனாளிகள் |
| 019 C | கலை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இலங்கை | 07 | - |
| 016 C | முகாமைத்துவம் | | - | 10 |
| 012 C | கணினி விஞ்ஞானம் | | - | 04 |
| 099 C | மென்பொருள் பொறியியல் | | - | 03 |
| 096 C | தகவல் முறைமைகள் | | - | 03 |
| 104 C | தகவல் & தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | 02 |
| 016 J | முகாமைத்துவம் | இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் | - | 05 |
| 079 J | முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (SEUSL) | இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் | - | 02 |
| 016 M | முகாமைத்துவம் | வயம்ப பல்கலைக்கழகம் | - | 05 |
| 068 Z | இசை # | கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | 03 | 03 |
| 085 Z | கட்புல கலை # | | - | 03 |
| 007 R | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | வவுனியா பல்கலைக்கழகம் | - | 05 |
| 015 R | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்) | | - | - |
| 038 R | தகவல்& தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | - |
| 104 R | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | 10 |

# இந்தப் பாட நெறிக்குத் தகுதியுடையவராக இருக்க, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் நடாத்தும் செயன்முறை/திறனறிவு பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் அவசியம்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப் படிவம் UGC இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025 டிசம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மின்னஞ்சல் மூலம்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ஸ்கேன் செய்து கீழ்க்காணும் மின்னஞ்சலுக்குஅனுப்பவும்:
daadmission@ugc.ac.lk

**அஞ்சல் மூலம்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தின் அச்சுப் பிரதியை கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்:
பிரதிச்செயலாளர் /பல்கலைக்கழக அனுமதிகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல 20, வார்ட் பிளேஸ், கொழும்பு - 07

மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள், தங்களின் நிலையை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ் அல்லது மாற்றுத் திறனாளி நிலை மதிப்பீட்டு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல்களை இணைக்க வேண்டும்.

விண்ணப்பத்திகதி முடிவடைந்த பின் பெறப்படும் விண்ணப்பங்கள் அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**இல 20, வார்ட் பிளேஸ்,**
**கொழும்பு - 07**

**16 நவம்பர் 2025**

tamilguru.lk